# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டுத் தரநிர்ணயக் குழுவின் "A+" தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.

அலுவலகம் : 0431-2407016, 2407060

தொலைப்படி : 0431-2407444

முனைவர் க. துரையரசன், எம்.ஏ.,எம்.எட்., எம்.ஃபில்.,பிஎச்.டி.
தேர்வு நெறியாளர்

மின் அஞ்சல் : coe@bdu.ac.in

வலைத்தளம் : www.bdu.ac.in


ந.க.எண். 008/தே.நெ.அ/ம.பி-2/ நவம்பர் 2019 நாள்: 28.08.2019

பெறுநர்

கல்லூரி முதல்வர் அவர்கள்
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற
அனைத்துக் கல்லூரிகள்

அன்புடையீர்,

பொருள்: நவம்பர் 2019 – Non Major Elective - தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி – ஆசிரியர்கள் பெயர் பட்டியல் கோருதல் - சார்பு.

------

பாரதிதாசன் பல்கலைக்கழக நவம்பர் 2019 பருவத்திற்கு தங்கள் கல்லூரியில் Non Major Elective Papers கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர்களைப் பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து **http://www.bdu.ac.in/examinations/nme.php** பதிவிறக்கம் செய்யப்பட்ட என்கிற இணைப்பில் காணப்பெறும் படிவத்தை பதிவிறக்கம் **MS Excel format-ல் பூர்த்தி செய்து confidential2@bdu.ac.in என்கின்ற மின் அஞ்சல் முகவரிக்கு** 09.09.2019–க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

படிவங்களைப் பூர்த்தி செய்யும் முன் கீழ்க்காணும் விவரங்களின் மீது தனிக் கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது:

1. **Non Major Elective Papers** பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர்களை மட்டும் அவர்களின் பணிமூப்பு (Seniority) அடிப்படையில் பட்டியலிடவும். பல்கலைக்கழகத் தேர்வாளர் பட்டியலில் இல்லாத ஆசிரியர்களின் பெயர்களைக் கண்டிப்பாகப் பரிந்துரைக்க வேண்டாம்.

2. மாற்றுப் படிவங்களை உபயோகிக்க வேண்டாம்.

3. ஆசிரியர்களின் எண்ணிக்கை (அனைத்துத் துறைகளையும் சேர்த்து) ஒவ்வொரு துறையிலும் தலா 02 ஆசிரியர்களின் பெயர்கள் மட்டும்.

4. பதிவிறக்கம் செய்யப்படாத MS Excel format-ல் பெறப்படும் மென் நகலினை (Soft Copy) ஏற்றுக்கொள்ள இயலாது.

5. மின்னஞ்சலுக்கு அனுப்பும் படிவத்தின் நகல் ஒன்றினைக் கல்லூரி முதல்வரின் கையொப்பம் இட்டு, அஞ்சல் வழியாகத் தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு 12.09.2019-க்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

நவம்பர் 2019 தேர்வு முடிவுகளை விரைவாக அறிவிக்க ஏதுவாகத் தங்களது ஒத்துழைப்பினை நல்கி இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி விரைந்து செயல்படுமாறு அனைத்துக் கல்லூரி முதல்வர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பெயர் பட்டியலை அனுப்பி வைக்காத கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மேற்படி விடைத்தாட்கள் திருத்தும் பணிக்கான நியமன ஆணை அனுப்ப இயலாது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

28/8/19

தேர்வு நெறியாளர்